# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2306/46 - 2022 නොවැම්බර් මස 17 වැනි බ්‍රහස්පතින්දා - 2022.11.17

*2306/46 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 17 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**1978ஆம் ஆண்டு 41ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபையின் சட்டத்தின் இலக்கம் 3(1) பிரிவின் கீழ் நகர அபிவிருத்தி பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்ட பிரதேசங்களுக்கு செல்வாக்கு செலுத்தும் வகையில் அபிவிருத்தி விண்ணப்பங்களுக்கான அனுமதியினை வழங்குதல் தொடர்பான துரித சேவை அலகினை நிறுவுவதற்கான அறிவித்தல்.**

1978ஆம் ஆண்டு 41ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபையின் சட்டத்தின் இலக்கம் 3(1) பிரிவின் கீழ் 'நகர அபிவிருத்தி பிரதேசமாக பிரகடனப்படுத்தப்படும் பிரதேசங்களுக்கு அபிவிருத்தி அனுமதிப்பத்திரங்களை விநியோகிக்கும் நடவடிக்கையினை துரிதப்படுத்துவதற்காக குறித்த நகர அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தின் இலக்கம் 5(1) பிரிவின் கீழ் நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் துரிதசேவை அலகு நிறுவப்பட்டது என்பதை குறித்த சட்டத்தின் 21(1) பிரிவின் கீழ் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஆகிய எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைவாக, இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் மக்களுக்கு அறிவிக்கின்றேன்.

1. **துரித சேவை அலகினை நிறுவுதல்**

   1978ஆம் ஆண்டு 41ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தின் 5(1) பிரிவிற்கமைவாக துரிதசேவை அலகு நிறுவப்படுவதுடன் அந்த அலகானது நோக்குக் குழு மற்றும் திட்டமிடல் குழு ஆகிய இரு குழுக்களினையும் உள்ளடக்கும்.


1A - PG 6051 — 106 (2022/11)

*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

2. துரித சேவை அலகின் அதிகாரங்கள் மற்றும் செயற் பாடுகள்

பின்வரும் நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தும் அதிகாரத்தினை துரித சேவை அலகு கொண்டிருக்கும்.

i. நகர அபிவிருத்தி அதிகாரசபையால் பிரகடனப்படுத்தப்பட்ட பகுதிக்குள் மேற்கொள்ளப்படும் ஏதேனுமொரு அபிவிருத்தி நடவடிக்கைக்காக விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ளல், செயற்படுத்தல், மதிப்பிடல், செயற்பாட்டு கட்டணங்களை அறவிடல் மற்றும் அபிவிருத்திக்கான அனுமதிகளை வழங்குதல்.

ii. விண்ணப்பதாரர் அல்லது அபிவிருத்தியாளரின் சார்பாக ஏனைய பங்குதாரர் நிறுவனங்களின் ஒப்புதல்கள் மற்றும் அனுமதிகளுக்காக விண்ணப்பித்தல்.

iii. சம்மந்தப்பட்ட பங்குதாரர் நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் மற்றும் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் அதிகாரிகளுடன் துரித சேவை அலகின் நோக்கு குழுவை நிறுவுதல் மற்றும் நோக்குக் குழு கூட்டங்களை நடாத்துதல்

iv. நகர அபிவிருத்தி அதிகாரசபையின் அதிகாரிகளை உள்ளடக்கிய துரித சேவை அலகின் திட்டமிடல் குழுவினை நிறுவுதல் மற்றும் திட்டமிடல் குழுவின் கூட்டங்களை நடத்தல்.

v. துரித சேவைப் பிரிவின் நோக்கக் குழு மற்றும் திட்டமிடல் குழுக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் சம்மந்தப்பட்ட பங்குதாரர் நிறுவனங்களை தீர்மானித்தல்.

vi. முதலீட்டு ஊக்குவிப்பு நோக்கத்திற்காக அபிவிருத்தி விண்ணப்ப செயல்முறையினை துரிதப்படுத்துவதற்காக விண்ணப்ப நடைமுறை, விண்ணப்ப செயற்பாட்டு நடைமுறை, விண்ணப்பப் படிவத்தைப் பரிசீலனை செய்யும் நடைமுறை மற்றும் கட்டண அட்டவணையை பிரத்தியேகமாக தயாரித்தல் மற்றும் காலத்திற்கு ஏற்ற வகையில் திருத்தி அமைத்தல் .

vii. ஏதேனும் ஒரு நிறுவனம் அதன் ஏற்புடைய காலவரையறையை நோக்குக் குழுவுக்கு அறிவித்ததன் பின்னர் உரிய சட்டத்தினால் குறித்துரைக்கப்பட்ட ஆகக் குறைந்த காலப்பகுதியினுள் விண்ணப்பப் பத்திரங்களைப் பரிசீலனை செய்வதற்கும் அனுமதிகள் அல்லது சிபாரிசுகளை வழங்குவதற்கும் அனுமதித்தல்.

viii. இந்த வர்த்தமானியில் 2 (vii) ஆம் விடயத்தில் மேற்குறிப்பிட்டவாறு குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய பொருத்தமான சட்டம் இல்லாதிருப்பின், காலவரையறையானது 14 வேலை நாட்களுக்குள் அல்லது நோக்குக் குழுவில் தீர்மானிக்கப்படும் அத்தோடு காலவரையறைக்குள் பதிலளிப்பது அத்தகைய நிறுவனங்களின் கடமையாகும்.

ix. ஏதேனுமொரு நிறுவனம் அல்லது நிறுவனங்களிற்கு இந்த வர்த்தமானி அறிக்கையின் இல. 2 (vii) மற்றும் (viii) இல் குறிப்பிடப்பட்டுள்ள காலவரையறைக்குள் விண்ணப்ப அனுமதியினை வழங்குவதில் தடைகள் ஏற்படுமிடத்து, விண்ணப்பதாரியினால் திருப்திக்குரியவகையில் தகுந்த ஆவணங்கள் வழங்கப்பட்டிருப்பின் திட்டமிடல் குழுவின் அனுமதியினை பெற்றுக்கொள்ள உடன்படுவதற்கு ஒருங்கிணைந்த அனுமதியினை துரித சேவை அலகின் நோக்குக் குழுவின் ஊடாக வழங்குதல்

x. சுற்றுச்சூழல் ஆலோசனைக்குழு (சு.ஆ.கு) மற்றும் போக்குவரத்து தாக்க மதிப்பீட்டுக் (போ.தா.ம) குழு என்பவற்றை முன்னெடுத்து துரிதசேவை அலகிற்கு அனுப்பப்படும் விண்ணப்பங்களுக்கான இறுதி தீர்மானங்களை எடுத்தல் தொடர்பாக 2 (iv) ஊடாக நிறுவப்படும் குழுவிற்கு அதிகாரத்தினை வழங்குதல்.

xi. ஏதேனுமொரு சர்ந்தர்ப்பத்தில், விண்ணப்பதாரரினால் தவறான தகவல்கள் அல்லது ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருப்பின் குறித்த விண்ணப்பங்களிளை நிராகரிப்பதற்கான அதிகாரம் உண்டு.

3. நோக்குக் குழுவில் பிரதிநிதித் துவப்படுத் தும் பங் குதாரர் நிறுவனங்கள்

**பங்குதாரர் நிறுவனங்கள் பின்வருமாறு**

3.1 நகர அபிவிருத்தி அதிகாரசபை

3.2 ஏனைய பங்குதார நிறுவனங்கள்

i. மத்திய சுற்றாடல் அதிகாரசபை

ii. தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச்சபை

iii. இலங்கை மின்சார சபை

iv. வரையறுக்கப்பட்ட இலங்கை மின்சார (தனியார்) நிறுவனம்.

v. இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுதாபனம்

vi. இலங்கை முதலீட்டு கூட்டுத்தாபனம்

vii. புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம்

viii. இலங்கைப் பாராளுமன்றம்

ix. வீதி அபிவிருத்தி அதிகாரசபை

x. கமநல சேவைகள் திணைக்களம்

xi. கரையோர பாதுகாப்பு திணைக்களம்

xii. இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்திஅதிகாரசபை

xiii. தேசிய கட்டிட ஆராய்ச்சி திணைக்களம்

xiv. இலங்கை புகையிரத திணைக்களம்

xv. இலங்கை சிவில் விமான போக்குவரத்து அதிகாரசபை.

xvi. தொல்பொருளியல் திணைக்களம்

xvii. கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகாரசபை

xviii. தேயிலை, இறப்பர் மற்றும் தெங்கு பெருந்தோட்டங்கள் (துண்டாடல் கட்டுப்பாட்டு) சபை

xix. வன பாதுகாப்பு திணைக்களம்

xx. நீர்ப்பாசன திணைக்களம்

xxi. பாதுகாப்பு அமைச்சு

xxii. கழிவு முகாமைத்துவ அதிகாரசபை

xxiii. இலங்கை மகாவலி அதிகாரசபை

xxiv. தொழிலாளர் திணைக்களம்

xxv. வனஜீவிகள் திணைக்களம்

xxvi. போக்குவரத்து பிரிவு, காவல்துறை தலைமையகம்

3.3 நகர அபிவிருத்தி அதிகாரசபையால் பிரகடனப்படுத்தப்பட்ட பிரதேசத்தின் அனைத்து உள்ளூராட்சி அமைப்புகளின் பின்வரும் நோக்கங்களை கொண்டிருக்கும்.

i. நகர திட்டமிடல் பிரிவு

ii. தீயணைப்பு துறை

iii. தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச்சபை

iv. திண்ம கழிவு முகாமைத்துவசபை

v. மதிப்பீட்டு திணைக்களம்

vi. வீதி பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து பிரிவு

4.1 துரித சேவை அலகின் நோக்குக் குழுவானது பின்வருமாறு அமைந்திருக்க வேண்டும்

4. “நோக்குக் குழுவின் மற்றும் திட்டமிடல் குழுவின்” உள்ளடக்கம்

**i. குழு அங்கத்தவர்கள்**

அ. குழுத் தலைவர்: நகர அபிவருத்தி அதிகாரசபையின் தலைவர் அல்லது தலைவரால் குறிப்பிடப்படும் விசேட பணிகளை செயல்படுத்துவதற்கு அவரால் அதிகாரமளிக்கப்படும் பணிப்பாளர் நாயகம் அல்லது பிரதி பணிப்பாளர் நாயகம் (திட்டமிடல்) பதவியை வகிக்கும் அதிகாரி.

ஆ. நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம்

இ நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பிரதி பணிப்பாளர் நாயகம் (திட்டமிடல்)

ஈ. அழைப்பாளர் : நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பிரதி பணிப்பாளர் (திட்டமிடல்) அல்லது துணைப் பணிப்பாளர் (திட்டமிடல்) பதவியின் அதிகாரி

உ. நோக்குக்குழுவின் தலைவரால் ஒவ்வொரு நிறுவனத்திலிருந்தும் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரும், இந்த வர்த்தமானியின் 3 ஆம் பிரிவில் மேலும் முழுமையாக விபரிக்கப்பட்டுள்ள நிறுவனத்தின் பிரதிநிதியாக ஆவணத்திணை செயற்படுத்தும் அதிகாரி.

ஊ. நகர அபிவிருத்தி அதிகாரசபையின் சம்மந்தப்பட்ட பணிப்பாளர் (திட்டமிடல்) மற்றும் தொடர்புடைய பணிப்பாளரால் பரிந்துரைக்கப்பட்டு நியமிக்கப்பட்ட அதிகாரி ( துணை பணிப்பாளர்/பிரதி பணிப்பாளர் (திட்டமிடல்) அந்தஸ்தில் உள்ள அதிகாரி)

எ. நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் (சட்டம்), அல்லது பணிப்பாளர் (சட்டம்) அவர்களினால் பரிந்துரைக்கப்பட்ட பிரதிநிதி பணிப்பாளர் /உதவி பணிப்பாளர் (சட்டம்) அந்தஸ்த்தில் உள்ள அதிகாரி

ஏ. மத்திய நிர்வாக தரத்திலான நகர திட்டமிடல் கலைஞர் பதவியில் அல்லது அமுலாக்க திட்டமிடல் அதிகாரி பதவியில் அல்லது அதற்கு சமமான பதவி வகிக்கும் அதிகாரி

**ii. அழைக்கப்பட்ட அங்கத்தினர்கள்.**

அ. தேவைக்கு ஏற்ப துரித சேவை அலகு தலைவர் மூலம் பரிந்துரைக்கப்படும் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் ஏனைய பிரிவுகளின் அதிகாரிகள்

**iii. குழு அங்கத்துவம் அற்றவர்கள்**

அ. விண்ணப்பதாரர் /அபிவிருத்தியாளர்.(தேவைப்படின்)

ஆ. தகமைப்பெற்ற நபர்ரொருவர் (தேவைப்படின்)

4.2 துரித சேவை அலகின் திட்டமிடல் குழு பின்வருமாறு அமைந்திருக்க வேண்டும்

அ. குழுத் தலைவர்: நகர அபிவருத்தி அதிகாரசபையின் தலைவர் அல்லது தலைவரால் குறிப்பிடப்படும் விசேட பணிகளை செயல்படுத்துவதற்கு அவரால் அதிகாரமளிக்கப்படும் பணிப்பாளர் நாயகம் அல்லது பிரதி பணிப்பாளர் நாயகம் (திட்டமிடல்) பதவியை வகிக்கும் அதிகாரி.

ஆ. நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம்

இ. நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பிரதி பணிப்பாளர் நாயகம் (திட்டமிடல்)

ஈ. அழைப்பாளர் : நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பிரதி பணிப்பாளர் (திட்டமிடல்) அல்லது துணை பணிப்பாளர் (திட்டமிடல்) பதவியின் அதிகாரி

உ. நகர அபிவிருத்தி அதிகாரசபையின் சம்மந்தப்பட்ட பணிப்பாளர் (திட்டமிடல்) மற்றும் தொடர்புடைய பணிப்பாளரால் பரிந்துரைக்கப்பட்டு நியமிக்கப்பட்ட அதிகாரி (துணை பணிப்பாளர்/பிரதி பணிப்பாளர் (திட்டமிடல்) அந்தஸ்தில் உள்ள அதிகாரி)

ஊ. நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர், (சட்டம்) அல்லது பணிப்பாளர் சட்டம் அவர்களினால் பரிந்துரைக்கப்பட்ட பிரதிநிதி (துணை பணிப்பாளர் /உதவி பணிப்பாளர் (சட்டம்) அந்தஸ்த்தில் உள்ள அதிகாரி)

எ. நகர திட்டமிடல் அல்லது அமுலாக்க திட்டமிடல் உத்தியோகத்தர் அல்லது நடுத்தர முகாமைத்துவ மட்டத்தில் சமமான உத்தியோகத்தர்களாக நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள்.

5. உரிய பங்குதாரர் நிறுவனங்களின் "தோக்கக் குழுவின்" அங்கத்து வத்திற்கு நியமனம் மற்றும் இராஜினாமாச் செய்தல்

5.1. குறித்த நிறுவனத்தின் சார்பில் பிரதிநிதித்துவம் செய்வதற்கும் தீர்மானங்களை எடுப்பதற்கும் நியமிக்கப்பட்டவர் தொடர்பாக, இங்கு குறித்துரைக்கப்பட்டுள்ள பங்குதாரர் நிறுவனத்தின் தலைவரினால் 3 ஆம் பிரிவின் பிரகாரம் எழுத்து மூலமான வேட்புமனுக்கள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

5.2 பங்குதாரர் நிறுவனங்களிடமிருந்து தமது நிறுவனத்திற்காக பெயர் குறிப்பிட்ட அங்கத்தவர்கள் ராஜினாமா தொடர்பாக இரு வாரங்களுக்கு முன் குழு தலைவருக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட வேண்டும் அதேவேளை புதிய அங்கத்தவர்களின் நியமிப்பு அத்துடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

6. அபிவிருத்தி விண்ணப் பங்களுக்கான செயற்பாட்டு கட்டணங்கள்

6.1 அபிவிருத்தி விண்ணப்பங்களுக்கான செயற்பாட்டு கட்டணங்கள் பின்வருமாறு

| *அபிவிருத்தி விண்ணப்பங்களின் வகை* | *ஆரம்ப கட்டணம்* | *செயற்பாட்டு கட்டணம்* |
|---|---|---|
| பூர்வாங்க திட்டமிடல் அனுமதி | ரூபா 10,000.00 | இல 2235/54 கொண்ட 2021 யூலை மாதம் 8ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலுக்கமைய ந.அ.அ.ச சாதாரண அனுமதி செயற்பாடுகளுக்கு செயற்பாட்டு கட்டணங்களின் 3.5 மடங்கு + அரசின் அனுமதி வரி |
| காணி துண்டாடும் விண்ணப்பங்கள் | ரூபா 10,000.00 | |
| கட்டட விண்ணப்பங்கள் | ரூபா 20,000.00 | |
| காணி மீளாய்வு செய்தல் | ரூபா 10,000.00 | |
| அமைவுச் சான்றிதழ்கள் | ரூபா 10,000.00 | |
| மீண்டும் புதுப்பிக்கும் விண்ணப்பங்கள் | ரூபா 10,000.00 | |

6.2 ஆரம்ப கட்டணமானது மொத்த செயற்பாட்டு கட்டணத்திலிருந்து குறைக்கப்படும் என்பதோடு இது விண்ணப்பங்களை பெறும் போது விதிக்கப்படும்.

6.3 விண்ணப்பங்கள் செயற்படுத்தும்போது ரூபா. 1000/- நிரந்தர போக்குவரத்து கட்டணமாக அறவிடப்படுவதோடு அது தவிர ஒவ்வொரு கிலோ மீட்டருக்கும் ரூபா.100/- வீதம் அறவிடப்படும். (ஒரு கிலோமீட்டருக்கு அறவிடப்படும் கட்டணம் காலத்திற்கு காலம் மாற்றியமைப்பதற்கு உட்பட்டதாக அமையும்.)

**பிரசன்ன ரணதுங்க (பா.உ),**
நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு.

நகர அபிவிருத்தி மற்றும்
வீடமைப்பு அமைச்சு,
17 மற்றும் 18 ஆம் மாடிகள்,
"சுஹுருபாய",
சுபுதிபுர வீதி,
பத்தரமுல்லை.
2022, நவெம்பர் 15.

EOG 11 - 0180

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.